ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2146/5 - 2019 ඔක්තෝබර් මස 21 වැනි සඳුදා - 2019.10.21
*2146/5 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### அரசாங்க சேவை ஆணைக்குழு

*அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள, 2017.02.01 ஆம் திகதிய 2004/49 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய சுகாதார சேவைக்குழுவினால் இது வரையில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் 2019.07.01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இத்தால் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன.*

*02. பின்வரும் சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்களை ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் 2(17) ஆம் பிரிவின் கீழ்* ஓய்வுபெறுவிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது :-

- *இலங்கைச் சுகாதார சேவையின் மருத்துவ சேவை மற்றும் ஆயுர்வேத மருத்துவ சேவையின் உத்தியோகத்தர்கள் ;*
- *சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் மற்றும் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய நாடளாவிய சேவையொன்றுக்குள் வராத 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (பின்னிணைப்பு II) பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள நிறைவேற்று மட்டத்திலான உத்தியோகத்தர்கள் ;*
- *சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் மற்றும் ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய நாடளாவிய சேவையொன்றுக்குள் வராத 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (பின்னிணைப்பு II) பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள மூன்றாம் மட்டத்தின் அதியுயர் தரத்தின் / விசேட தரத்தின் உத்தியோகத்தர்கள்.*

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட 2017.02.01 ஆம் திகதிய 2004/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்கள் மற்றும் அவற்றுக்கு அவ்வப்போது செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் வலுவிலிருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எம். ஏ. பி. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 1200/09,
இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, ஒற்றோபர் 15.

11-644